www.Padasalai.Net

**செய்தி வெளியீடு எண்: 680** **நாள்: 18.05.2024**

# அயலகத் தமிழர் நலத்துறை

வேலைவாய்ப்பு, கல்வி, வணிகம் போன்ற காரணங்களுக்காக தமிழர்கள் அயல்நாடுகளுக்கு புலம்பெயர்வது சமீப காலங்களில் அதிகரித்துள்ளது. இவ்வாறு புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர்களின் நலன் காக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 'அயலகத் தமிழர் நல வாரியம்' அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாரியம் மூலம் அயலகத்தில் உள்ள தமிழர்களுக்கென பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

**2. அயலகத் தமிழர் நல வாரியத்தில் உறுப்பினர் பதிவு**

18 முதல் 55 வயது வரை உள்ள அயலகத் தமிழர்கள், அயலகத் தமிழர் நலத்துறையின் வலைதளத்தில் (https://nrtamils.tn.gov.in) ஒரு முறை பதிவு கட்டணமாக ரூ.200/- செலுத்தி கீழ்க்கண்ட இரண்டு பிரிவுகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் வாரியத்தில் உறுப்பினராக இணைந்து அடையாள அட்டையினை பெறலாம். இந்த அடையாள அட்டை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

- **அயலகத் தமிழர் (வெளிநாடு):** இந்திய கடவுச்சீட்டு மற்றும் தகுந்த ஆவணங்களுடன் அயல்நாடுகளில் பணிபுரியும் / கல்வி பயிலும் தமிழர்கள் மற்றும் Emigration Clearance பெறப்பட்டு அயல்நாடு செல்ல உள்ள தமிழர்கள் இப்பிரிவில் உறுப்பினராக தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

www.Padasalai.Net

- **அயலகத் தமிழர் (வெளிமாநிலம்):** இந்தியாவின் பிற மாநிலங்களில் (தமிழ்நாட்டிற்கு வெளியே) ஆறு மாதங்களுக்கு மேல் வசிக்கும் தமிழர்கள் இப்பிரிவில் உறுப்பினராக தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

உறுப்பினர் பதிவை ஊக்குவிக்கும் விதமாக **15.05.2024 முதல் 15.08.2024 வரையிலான மூன்று மாதங்களில் பதிவு செய்யும் நபர்களுக்கு பதிவு கட்டணம் ரூ.200/– செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது**.

**3. அயலகத் தமிழர்களுக்கான நலத்திட்டங்கள்**

அயலகத் தமிழர் நல வாரியத்தில் உறுப்பினர் பதிவு பெற்ற நபர்கள், வாரியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் செயல்படுத்தப்பட உள்ள நலத்திட்டங்களிலும் பயன் பெறலாம்.

**1 விபத்து காப்பீடு**

- அயலகத் தமிழர் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள நபர் இவ்விபத்து காப்பீட்டில் கீழ்க்கண்ட சந்தாக்களில் தங்களுக்கு விருப்பமான ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து கொள்ளலாம்.

| காப்பீட்டு தொகை | சந்தா (மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை) |
|---|---|
| ரூ. 5,00,000/– | ரூ. 395 + GST |
| ரூ. 10,00,000/– | ரூ. 700 + GST |

**1.2 தீவிர & தொடர் சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான காப்பீடு (Critical Illness)**

- தீவிர மற்றும் தொடர் சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான இக்காப்பீடு திட்டத்தில் விருப்பத்தின் பேரில் விபத்து காப்பீட்டு திட்டத்துடன் கூடுதலாக ஆண்டுக்கு ஒரு முறை சந்தா செலுத்தி இணையலாம்.

www.Padasalai.Net

<u>இத்திட்டத்தின் கீழ் வரும் நோய்கள்</u>

1. Cancer
2. Kidney failure
3. Primary pulmonary arterial Hypertension
4. Multiple Sclerosis
5. Major organ transplant
6. Coronary artery by–pass grafts
7. Aorta graft surgery
8. Heart Valve surgery
9. Stroke
10. Myocardial Infarction (First heart attack)
11. Coma
12. Total Blindness
13. Paralysis

- இக்காப்பீடு தீட்டத்தில் கீழ்க்கண்ட சந்தாக்களில் தங்களுக்கு விருப்பமானதை தேர்வு செய்யலாம்.

| காப்பீட்டு தொகை | சந்தா (ஆண்டுக்கு ஒரு முறை) |
|---|---|
| ரூ. 1,00,000/– | ரூ. 350 + GST |
| ரூ. 2,00,000/– | ரூ. 700 + GST |
| ரூ. 3,00,000/– | ரூ. 1,050 + GST |
| ரூ. 4,00,000/– | ரூ. 1,400 + GST |
| ரூ. 5,00,000/– | ரூ. 1,750 + GST |

**2) கல்வி உதவித்தொகை திட்டம் (Scholarship Scheme)**

இத்திட்டத்தின் கீழ் அயல்நாடுகளுக்கு பணியின் பொருட்டு சென்று உறுப்பினராக உள்ள தமிழர் இறக்கும் நிலையில் அவர்களின் குடும்பத்திலுள்ள மகன் / மகளுக்கு (அதிகபட்சம் இரண்டு குழந்தைகளுக்கு) அவர்களின் கல்வி நிலைக்கேற்ப கல்வி உதவித் தொகை வழங்கப்படும்:

www.Padasalai.Net

**2.2 உதவித்தொகை விகிதம்**

| வ. எண் | பாடப் பிரிவு | உதவித் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 10 – ஆம் வகுப்பு | 3000 |
| 2. | 11 மற்றும் 12 – ஆம் வகுப்பு (மேல்நிலைக் கல்வி) | 4000 |
| 3. | தொழிற் பயிற்சி கல்வி | |
| 4. | பொறியியல் பட்டயப் படிப்பு | 5000 |
| 5. | மருத்துவப் பட்டயப் படிப்பு | |
| 6. | ஆசிரியர் பயிற்சி பட்டயப் படிப்பு | |
| 7. | உடற்பயிற்சி கல்வி பட்டயப் படிப்பு | |
| 8. | பொறியியல் பட்டப்படிப்பு | 8000 |
| 9. | மருத்துவ பட்டப்படிப்பு | |
| 10. | சட்டப் பட்டப்படிப்பு | |
| 11. | விவசாய படிப்பு | |
| 12. | ஆசிரியர் பயிற்சி பட்டப்படிப்பு | |
| 13. | உடற்பயிற்சி கல்வி பட்டப்படிப்பு | |
| 14. | பொறியியல் பட்ட மேற்படிப்பு | 12000 |
| 15. | மருத்துவ பட்ட மேற்படிப்பு | |
| 16. | சட்ட பட்ட மேற்படிப்பு | |
| 17. | விவசாய பட்ட மேற்படிப்பு | |
| 18. | ஆசிரியர் பயிற்சி பட்ட மேற்படிப்பு | |
| 19. | உடற்பயிற்சி கல்வி பட்ட மேற்படிப்பு | |

**3) திருமண உதவித்தொகை திட்டம் (Marriage Assistance Scheme)**

இத்திட்டத்தின் கீழ் அயல்நாடுகளுக்கு பணியின் பொருட்டு சென்று உறுப்பினராக உள்ள தமிழர் இறக்கும் நிலையில் அவர்களின் குடும்பத்திலுள்ள திருமண வயது பூர்த்தியடைந்த மகன் / மகளுக்கு (அதிகபட்சம் இரண்டு குழந்தைகளுக்கு) திருமண உதவித்தொகையாக ரூ.20,000 வழங்கப்படும்.

**கல்வி தகுதி**

- பழங்குடியின பிரிவினர் குறைந்த பட்சம் 5ம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் ; பிற பிரிவினர் குறைந்த பட்சம் 10ம் வகுப்பு முடித்திருக்க வேண்டும்.

www.Padasalai.Net

**4) மேற்காணும் திட்டங்கள் குறித்த கூடுதல் விளக்கங்களை அறிந்து கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

**அ) கட்டணமில்லா தொலைபேசி உதவி மையம்**

அயலகத் தமிழர்களுக்கான நலத்திட்டங்கள், வாரியத்தில் உறுப்பினராகுதல் தொடர்பான சந்தேகங்களுக்கும் தீர்வுகாண இவ்வாணையரகத்தின் கட்டணமில்லா தொலைபேசி சேவை மையத்தினை தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**கட்டணமில்லா உதவி எண்**

I. 18003093793 (இந்தியாவிற்குள்)

II. 8069009901 (அயல்நாடுகளிலிருந்து தொடர்புக்கு)

III. 8069009900 (Missed Call)

**ஆ) முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையம்**

அயல்நாடுகளுக்கு செல்லும் தமிழர்களுக்கு அவர்களுக்கான பாதுகாப்பான, சட்டப்பூர்வமான, முறையான இடப்பெயர்வை உறுதி செய்ய முன் பயண புத்தாக்கப் பயிற்சியானது கீழ்க்கண்ட ஏழு மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்டு வருகிறது.

இம்மையங்களை அணுகும் நிலையில் அயலகத் தமிழர்களுக்கான நலத்திட்டங்கள் தொடர்பான விளக்கங்களும், வாரியத்தில் உறுப்பினர் பதிவும் மேற்கொள்ளப்படும்.

முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையங்கள் :

| மாவட்டங்கள் | தொடர்புக்கு |
|---|---|
| i. தஞ்சாவூர்,<br>ii. இராமநாதபுரம்,<br>iii. பெரம்பலூர், | திரு. சந்தானம்,<br>Dhan Foundation<br>+91 86104 64077, +91 97915 25231 |

www.Padasalai.Net

| | |
|---|---|
| iv. கன்னியாகுமரி,<br>v. சிவகங்கை<br>vi. விழுப்புரம் | Sr. வளர்மதி,<br>Tamil Nadu Domestic Workers Welfare Trust<br>+91 99401 97583, +91 82200 24967 |
| vii. புதுக்கோட்டை | திருமதி. தெய்வானை,<br>Sward Solution Manpower Placement Consultancy<br>+91 96885 20300 |

அயலகத் தமிழர்களுக்கான புகைப்பட அடையாள அட்டைக்கு பதிவு செய்யும் முறை மற்றும் நலத்திட்டங்கள் தொடர்பான விரிவான தகவல்களுக்கு இவ்வாணையரக வலைதளத்தினை (https://nrtamils.tn.gov.in) பார்க்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அயல்நாடுகள் மற்றும் வெளிமாநிலங்களுக்கு புலம்பெயர்ந்த மற்றும் புலம்பெயரவுள்ள தமிழர்கள், அயலகத் தமிழர் நலவாரியத்தில் உறுப்பினராக இணைந்து அரசின் நலத்திட்டங்களை பெற்றிட தமிழ்நாடு அரசின் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

**ஆணையர்**
**அயலகத் தமிழர் நலத்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

www.Padasalai.Net

Press Release No: 680 Date: 18.05.2024

# PRESS RELEASE

## DEPARTMENT OF WELFARE OF NON-RESIDENT TAMILS –

Migration of Tamils to foreign countries has recently increased for reasons like employment, education, business and other reasons. In order to ensure protection of the welfare of Tamils who have migrated to other countries and other states of India, "Non-Resident Tamils Welfare Board" was established as per the order of Hon'ble Chief Minister of Tamil Nadu and the Board implements many schemes for the welfare of Non-Resident Tamils.

## 2. Membership Registration in Non-Resident Tamils Welfare Board

Non- Resident Tamils aged 18 to 55 years living abroad or in other states of India can register themselves on this commissionerate's website (https://nrtamils.tn.gov.in) as members of the Board through any of the following two categories by paying a one-time registration fee of Rs.200/-. This Identity Card needs to be renewed every three years.

- **Non-Resident Tamil living (abroad):** Tamils working/studying abroad with an Indian passport and appropriate documents and Tamils intending to go abroad after obtaining Emigration Clearance are eligible for membership in this category.
- **Non-Resident Tamil living (India):** Tamils residing in any other states of India apart from Tamil Nadu for more than six months are eligible for membership in this category.

To encourage membership registration, **registration fee of Rs.200/- is waived for persons registering for an initial period of three months from 15.05.2024 to 15.08.2024.**

## 3. Welfare Schemes for Non-Resident Tamils

Those who register as members of the Non-Resident Tamils Welfare Board can benefit from the existing following schemes implemented by the board, as well as the welfare schemes which are to be implemented in the future.

www.Padasalai.Net

**1. Insurance Scheme**

The following two types of insurance plans with low premium rates are offered in collaboration with New India Assurance Company Limited to Tamils working/studying abroad:

i) Personal accident Insurance
ii) Critical illness Insurance (add-on)

**1.1 Personal Accident Insurance**

An NRT ID card holder can choose from the following coverage options for Personal Accident Insurance:

| Insurance amount | Premium (payable once every three years) |
|---|---|
| Rs. 5,00,000 | Rs. 395+GST |
| Rs. 10,00,000 | Rs. 700+GST |

**1.2 Critical Illness Insurance**

Insurance for illness requiring intensive and continuous treatment can be availed as an add-on to the personal accident insurance plan.

The below illness are covered under this coverage:

1. Cancer
2. Kidney failure
3. Primary pulmonary arterial Hypertension
4. Multiple Sclerosis
5. Major organ transplant
6. Coronary artery by-pass grafts
7. Aorta graft surgery
8. Heart Valve surgery
9. Stroke
10. Myocardial Infarction (First heart attack)
11. Coma
12. Total Blindness
13. Paralysis

An NRT ID cardholder can choose from the following coverage options:

| Insurance amount | Premium (payable every year) |
|---|---|
| 1,00,000/- | Rs.350 + GST |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 2,00,000/- | Rs.700 + GST |
| 3,00,000/- | Rs.1,050 + GST |
| 4,00,000/- | Rs.1,400 + GST |
| 5,00,000/- | Rs.1,750 + GST |

**2. Educational Assistance Scheme:**

In the event of the death of an NRT ID card holder who has gone abroad for work, the son/daughter of the registered deceased person will be given an educational scholarship according to their educational level Under this scheme:

**2.2 Rate of Scholarship**

| Subject | Scholarship |
|---|---|
| 10th std | Rs. 3,000 |
| 11th & 12th std | Rs. 4,000 |
| I.T. I | Rs. 4,000 |
| Diploma in Engineering/ Medicine/ Teacher Training/ Physical Education | Rs. 5,000 |
| Bachelor's degree in Engineering/ Medicine/ Law/ Agriculture/ Teacher Training/ Physical Education | Rs. 8,000 |
| Post Graduate Degree in Engineering/ Medicine/ Law/ Agriculture/ Teacher Training/ Physical Education | Rs. 12,000 |

**3. Marriage Assistance Scheme:**

In the event of the death of an NRT ID cardholder with validity at the time of death who has gone abroad for work, a marriage assistance of

www.Padasalai.Net

Rs.20,000 will be given to son/daughter of marriageable age in their family under this scheme:

**3.1 Educational Qualification:**

- In order to be eligible for those who belong to scheduled tribes should have studied up to 5th standard; for others, one must have completed at least 10th standard;

**For any additional inquiries raised by applicants, they can be encouraged to reach out to the department through the established helplines and Pre-Departure Orientation Training Centres:**

**a) 24x7 toll-free helpline –** The Board has established a 24x7 toll-free helpline center to assist with any questions regarding the schemes.

**Toll Free Helpline Number**

- 18003093793 (Within India)
- 8069009901 (Outside India)
- 8069009900 (Missed Call)

**b) Pre-Departure Orientation Training Centres**

Pre-Departure Orientation Training is being provided at the respective District Collectorate offices in the following seven districts to ensure safe, legal and proper migration to foreign countries. These centres would also provide assistance for the registration of membership in the board.

Pre-Departure Orientation Training Centers:

| Districts | Contact Details |
|---|---|
| i. Thanjavur,<br>ii. Ramanathapuram,<br>iii. Perambalur, | Thiru. Santhanam,<br>Dhan Foundation<br>+91 86104 64077, +91 97915 25231 |
| iv. Kaniyakumari,<br>v. Sivagangai,<br>vi. Villuppuram | Sr. Valarmathi,<br>Tamil Nadu Domestic Workers Welfare |

www.Padasalai.Net

| | |
|---|---|
| | Trust<br><br>+91 99401 97583, +91 82200 24967 |
| vii. Pudukottai | Mrs. Deivanai,<br><br>Sward Solution Manpower Placement Consultancy<br><br>+91 96885 20300 |

For detailed information regarding the registration process and welfare schemes for Non-Resident Tamils, kindly visit the website of this Commissionerate (https://nrtamils.tn.gov.in).

On behalf of the Government of Tamil Nadu, the Tamils who have migrated to other states and foreign countries are requested to become members of the Tamil Nadu Non-Resident Tamils Welfare Board and receive the welfare schemes of the Government.

**Commissioner**
**DEPARTMENT OF**
**WELFARE OF NON-RESIDENT**
**TAMILS**

**Issued By: DIPR, Secretariat, Chennai – 9**

For Latest Government News, Follow Us On :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in